பக்கங்கள் 8

# ஈழநாடு

The Eelanaadu

60 சதம்

மலர் 22 ஐப்பசி 19 ஜூல்-கஜ் 25 இதழ் 266

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 4-11-80

RECEIVED 1980-11-4 PERIODICALS DIVISION

## பிரதமர் பிரேமா 29ம் திகதியாழ்ப்பாணத்தில்?

(நெல்லியடி)

நெல்லியடி பட்டினசபையால் நிர்மாணிக்கப்பட்டுவரும் நவீன சந்தையினை பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசா இம்மாதம் 29ந் திகதி திறந்து வைப்பார் என தெரியவருகின்றது.

யாழ். மாவட்டத்தில் நவீன கிராமமாகத் தெரிவுசெய்யப்பட்டு, நிர்மாண வேலைகள் நடைபெற்றுவரும் கன்பொல்லைக் கிராமத்தினை திறந்து வைப்பதற்காக வருகை தரும்போது இந்த நெல்லியடி நவீனசந்தையினையும் அவரைக்கொண்டே திறந்து வைக்க பட்டினசபை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

## நேற்று முன்தினம் நடைபெற்ற கடைசிநேர பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பில் ரீகனுக்கு வெற்றிவாய்ப்பு

(வாஷிங்டன்)

இன்று நடைபெறும், அமெரிக்காவின் நாற்பதாவது ஜனாதிபதித் தேர்தலையொட்டி நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட, கடைசிநேர பொதுசனஅபிப்பிராய வாக்கெடுப்பில், குடியரசுக் கட்சி வேட்பாளர் திரு. டொனல்ட்ரீகனின் செல்வாக்கு அதிகரித்துள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

திரு. ஜிம்மி கார்ட்டருக்கும், திரு. டொனல்ட் ரீகனுக்கும் வெற்றிவாய்ப்பு ஓரளவு சமமாக இருந்த போதிலும் கடைசிநேர பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பில், திரு. கார்ட்டரை விட திரு. ரீகனின் செல்வாக்கு சற்று அதிகரித்துள்ளது.

பெரும் தொழிற்பகுதிகள் நிறைந்த இடங்களில் திரு. கார்ட்டர் தமது செல்வாக்கை இழந்திருக்கும் அதேநேரத்தில்; முன்னர் நடைபெற்ற பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பில் திரு. கார்ட்டரைவிட செல்வாக்குக்குறைவாகப் பெற்ற திரு. ரீகன் இப்பொழுது திரு. கார்ட்டரைவிட கூடுதல் புள்ளி பெற்றுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

கடைசியாக நடைபெற்ற பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பில் மக்கள் உற்சாகமாகக் கலந்துகொண்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

★ அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்களத்தில் இருபத்தொருபேர்!

# ஜனாதிபதி - கார்ட்டரா? ரீகனா?

# நாளைமறுதினம்முடிவுதெரியும்!

## ஆட்சிக்கு வருபவருக்கு குறைந்த பெரும்பான்மையே கிடைக்கும்

(வாஷிங்டன்)

உலகின் கவனத்தை மிகவும் ஈர்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறுகிறது. மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் நடைபெறும் அமெரிக்காவின் நாற்பதாவது ஜனாதிபதித் தேர்தலில் திரு. ஜிம்மி கார்ட்டர், திரு. டொனல்ட் ரீகன் உட்பட மொத்தம் இருபத்தொரு பேர் போட்டியிடுகின்றார்கள், இவர்களில் 19 பேர் சுயேச்சையாகப் போட்டியிடுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் திரு. ஜிம்மி கார்ட்டர் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகவும், திரு. ரீகன் குடியரசுக் கட்சி வேட்பாளராகவும் போட்டியிடுகின்றனர்.

முழு முடிவுகளும் நாளை மறுதினம் தெரிந்துவிடும் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

அரசியல் அவதானிகளின் கருத்துப்படி திரு. ஜிம்மி கார்ட்டருக்கும், திரு. டொனல்ட் ரீகனுக்கும் கடுமையான போட்டி நிலவுவதால்; ஆட்சிக்கு வருபவர் ஆகக் குறைந்த பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றே வெள்ளை மாளிகைக்குள் நுழையலாம் என்று தெரியவருகிறது.

வாஷிங்டன் பத்திரிகைகள் பல, ரீகனுக்கு ஆதரவாக, மறைமுகமாக நேற்று செய்திகள் வெளியிட்டிருந்தன.

(4-ம் பக்கமும் பார்க்க)

## பணயக் கைதிகளை ஈரானிய அரசு பொறுப்பேற்றது

தெஹ்ரான், நவ 3

ஈரானிய மதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னியின் பணிப்பை தொடர்ந்து தீவிரவாத மாணவர்கள், தங்கள் வசமிருந்த 52 பணயக் கைதிகளையும் இன்று ஈரானிய அரசிடம் ஒப்படைத்தனர்

இதற்கிடையே, இன்று கடைசியாக வெளியான செய்திகளின்படி இப்பணயக் கைதிகளை ஈரானிய அரசு அல்ஜீரிய தூதரகத்தில் ஒப்படைத்துள்ளதாக தெரியவருகிறது.

### கொமெய்னி உத்தரவு

ஈரானிய தீவிரவாத மாணவர்களினால் பணயம் வைக்கப்பட்ட 52 அமெரிக்க அதிகாரிகளையும் ஈரானிய அரசிடம் ஒப்படைக்குமாறு புரட்சிவாதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னி இன்று உத்தரவிட்டதைத் தொடர்ந்து தீவிரவாதமாணவர்கள் பணயக்கைதிகளை இன்று ஈரானிய அரசிடம் கையளித்தனர். பணயக் கைதிகளை ஈரானியப் பிரதமர் ஜனுப் அல் ரஜாய் ஈரானிய அரசசார்பில் ஏற்றுக்கொண்டார்,

### கார்ட்டரின் கடிதம்

இதற்கிடையே அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டரின் கடிதமொன்றை, தாஹ்ரானிலுள்ள சுவிற்சர்லாந்து தூதர் ஈரானிய பிரதமரிடம் இன்று கையளித்துள்ளார் இந்த விபரத்தை வெளியிட்ட தொஹ்ரான் வானொலி கடிதம் விபரம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

## நாளைய பட்ஜட்டில் 'அற்புதங்கள்' இருக்காது?

(கொழும்பு)

நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் நாளை புதன்கிழமை சமர்ப்பிக்கும் பட்ஜட், அதிசயங்களையோ அல்லது அற்புதங்களையோ கொண்டிருக்கமாட்டாது என்றும் ஆனாலும் நடுத்தர மக்கள் மீது மேலும் வரி சுமத்தாத ஒரு ஆறுதல் பட்ஜட்டாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

பாராளுமன்றம் இன்று கூடுகிறது நாளை நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு ரொனி டி மெல் தமது வரவு செலவுத் திட்ட உரையை நிகழ்த்தும் பொருட்டு பாராளுமன்றம் ஒருமணி நேரம் முன்னதாகவே பிற்பகல் இரண்டு மணிக்குக் கூடும்

### சம்பள உயர்வு

நிதிஅமைச்சர் தமது பட்ஜட் உரையில், உத்தேச எழுபது ரூபா சம்பள உயர்வுபற்றி உடனடியாக எதுவும் குறிப்பிடமாட்டார் எனவும், பட்ஜட்டுக்குப் பின்னரே சம்பள உயர்வு பற்றிய யோசனையை நிதிஅமைச்சர் அறிவிப்பார் என்றும் அரசாங்க வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இதேபோல பொதுவாக எதிர்பார்க்கப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றமும் இம்முறை பட்ஜட்டில் இடம்பெறமாட்டாது என்று இந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பட்ஜட் விவாதம் இம்மாதம் 11 ம் திகதி ஆரம்பமாகும். எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் விவாதத்தை ஆரம்பித்து வைப்பார். பட்ஜட் மீதான வாக்கெடுப்பு இம்மாதம் 19ல் நடைபெறும். 25-ம் திகதி குழுநிலை விவாதம் ஆரம்பமாகி டிசம்பர் மாதம் 19ம் திகதி மூன்றாவது வாசிப்பு மீதான கடைசி வாக்கெடுப்பு நடைபெறும். (ம)

## எலக்ரோனிக் தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் தெல்லிப்பளையில் அமைகிறது

(யாழ்ப்பாணம்)

மத்திய எலக்ரோனிக் தொலைபேசி பரிவர்த்தனை நிலையம், தெல்லிப்பளையில் அமைக்கப்படவிருக்கிறது.

இந்தத் தன்னியக்க நிலையத்துக்கான அத்திபாரக் கல்லை வடபிராந்திய தொலைபேசிப் பகுதிப் பொறியியலாளர் திரு. வி. யோகநாதன் நாட்டினார்.

இம் மத்திய எலக்ரோனிக் தொலைபேசி பரிவர்த்தனை நிலையம்; சுன்னாகம், அச்சுவேலி, காங்கேசன்துறை ஆகிய மூன்று பகுதிகளையும் இணைக்கும். இந்நிலையம் பூர்த்தியானதும் ஐநூறு தொலைபேசித் தொடர்புகள் இயங்கக்கூடியதாக இருக்கும். 1981ம் ஆண்டுக்கு முன்னர் இதனைப் பூர்த்தியாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்பின்னர் மேற்கூறிய மூன்று பகுதிகளில் இருந்தும் கொழும்புடன் நேரடியாகத் தொடர்புகொள்ளலாம்.

இதேபோன்று இரு பரிவர்த்தனை நிலையங்கள் கோப்பாயிலும் புங்குடுதீவிலும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பதிவு செய்யப்படாத டெலிக்கா வான், சீர்திருத்திய (F)போட் வான் விற்பனைக்கு உண்டு. ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 7603, 7699. (7194)

கோழிக்குஞ்சுகள் (விருத்துப் பருவம்) விற்பனைக்குண்டு. ராதா மெஷின் கொம்பனி, 586, கண்டி றோட், நெடுங்குளம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம். 7195

ஜேர்சாக் கன்றுகள், அசோகாக் கன்றுகள், தோடங்கன்றுகள், தேயிலை வெற்றுப்பெட்டிகள், முட்டைகள் என்பனவற்றை தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அண்ணா இன்டஸ்ரீஸ் ஸ்ரோர்ஸ், செம்மா தெரு, [சுலைமான்கண்டு அருகாமையில்] யாழ்ப்பாணம். 7228

நல்ல நிலையில் உள்ள சிங்கர் வோக் (Singer Vouge) கார் விற்பனைக்கு உண்டு. 4சிறி 8347 கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். சி. ஸ்கந்தமயம், ரும்ரூஜ், சித்தங்கேணி. 7250

## தேவை

சகலவிதமான (C/Lan) எஸ்லோன் உப உறுப்புக்களைச் செய்யக்கூடிய தொழிலாளி வேண்டும். அவர் முன் அனுபவமுள்ளவராக இருத்தல் முக்கியம். சம்பள விபரத்துடன் 8-11-80க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 7233, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 7233

கற்பூரம் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு கற்பூரம் அடிக்க, பக்செட்போட, பெண் பிள்ளைகள் தேவை. 15-11-80-க்கு முன் விண்ணப்பிக்கவும். முன் அனுபவம் விரும்பத்தக்கது. கிருஷ்ணகுமார், கிருஷ்ணவாசம் கோயில் வீதி, கொக்குவில் 7256

நிறுவனமொன்றில் நிரந்தர சேவை செய்யக்கூடிய ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்தாளர், (ஆண்/பெண்) தேவை. 'போட்டோஸ்ரட்' சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 7258, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 7258

பளைப் பகுதியில் 10 அல்லது 15 ஏக்கர் தென்னந் தோட்டம் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். சி. ஸ்கந்தமயம், 'ரும் ரூஜ்', சித்தங்கேணி. 7249

### சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது) சுன்னாகம்

## பதவி வெற்றிடம்

### பொதுமுகாமையாளர் தரம் 11

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ். மாவட்டப் பகுதியிலுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

காரியாலயத்தில் ரூபா 2/- செலுத்தி விண்ணப்பப் படிவத்தையும் விபரத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி 20-11-1980.

தலைவர்.

7252

## விளம்பரம்

பூநகரி ப. நோ. கூ. சங்க அண்மையில் உள்ள கட்டிடம் ஒன்று திருத்தவேலை செய்ய வேண்டியிருப்பதால் கீழ்க்காண் வேலைகளுக்கான கூலி விண்ணப்பம் கேள்வி மூலம் கோரப்படுகின்றது.

1. சுவர்கொத்தி பூசுவதற்கும், நிலர் கல்லுபோட்டு நிலம் வேலை செய்வதற்கும், பழைய நிலை சழட்டி புதிய நிலை பூட்டுவதற்கும் கூலிக்கான கேள்வி கோரப்படுகின்றது.

நிலம் கொத்தி பழைய பொருள் அப்புறப்படுத்தி புதிய கொங்கிறீற் போட 1 சது கூலி.

நிலையை சழட்டிவைத்து கட்டுவதற்கு கூலி சுவர் கொத்திபூசுவதற்கு 1சது. கூலி. கதவுநிலை, சுவர் பெயின்ற் வெள்ளைஅடிக்க 1 சது. கூலி.

கதவு நிலை உரிய அளவில் உருப்படியாக விநியோகம் செய்ய பொருள் கேள்வி

மேலதிக விபரங்களுக்கு பொதுமுகாமையாளர், பூநகரி ப. நோ. கூ. சங்கத்திடம் தொடர்பு கொள்ளவும்

விண்ணப்ப முடிவு திகதி 10-11-1980.

பொதுமுகாமையாளர்,
பூநகரி ப. நோ. கூ. சங்கம்,
7251 பூநகரி.

## பின்முற்றுகும் கட்டளை பற்றிய அறிவித்தல்

இல: 84அ - பிரிவுகள் 524, 532

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றில்

காலஞ் சென்ற சரவெட்டி வடக்கு, நல்லதம்பி நீக்கிலாப்பிள்ளை சுவாக்கீம்பிள்ளை மரண சாதன விடயத்தில்
(இறப்பு) சுவாக்கீம்பிள்ளை கைம்பெண் ஞானப்பு,
கரவெட்டி வடக்கு,

1. (அ) இறங்கசாமி இராமசாமியும்,
1. (ஆ) பெண் ஞான சௌந்தரியும் இருவரும்

— மனுதார்கள்.

மரணசாதன நியாயாதிக்கம் இல. 1037/T

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்முற்றுகும்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு மார்கழி மாதம் 12-ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்முற்றுகும் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு வேண்டப்படுகின்றார்.

1980-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 8-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

(ஒப்பம்)
வே. கணபதிப்பிள்ளை,
பதிவாளர்

வரைவு:
(ஒப்பம்)
வ. செல்லையா,
மனுதார்களின் சட்டத்தரணி.
7241

## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம் தபால் நிலையத்தில் உதவித்தபால் அதிபராகக் கடமையாற்றிய சித்தங்கேணியைச் சேர்ந்த திரு எஸ். வி சிவப்பிரகாசம் பண்டத்தரிப்பு உதவித் தபால் அதிபராக கடந்தமாதம் தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (அ)

# "இந்துசமயம் மீண்டும் வலிமைபெற பெருமையுடன் செயல்படுவோம்"

## யாழ். அரசஅதிபர் வேண்டுகோள்

(மல்லாகம்)

"சமயம்தான் ஒரு மனிதனை முழு மனிதனாக வாழச் செய்கிறது இந்துசமயம், தத்துவ ஞானங்களை உள்ளடக்கிய சிறப்புமிக்க சமயமாகும். அதன் தத்துவ ஞானம் ஈழத் தேச மக்களுக்கு மட்டுமன்றி மேலைத்தேச மக்களுக்கும் வழிகாட்டி வருகின்றது. பழமையும், பெருமையும் மிக்க இந்து சமயத்தை மீண்டும் வலிமையும், சிறப்பும் கொள்ளச் செய்வதற்கு இந்துக்கள் அனைவரும் பெருமையுடன் செயல்பட வேண்டும்"

மல்லாகம் இந்துசமய அபிவிருத்திச் சங்கத்தின் 19 வது ஆண்டுநிறைவுவிழாவும், பரிசளிப்பு விழாவும் நடைபெற்ற போது அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி மேற்கண்டவாறு உறினார்.

மேற்படிவிழா மல்லாகம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு அ, சரவணமுத்து தலைமையில் நடைபெற்றது. திரு, யோகேந்திர துரைசுவாமி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "இந்துப் பெருமக்கள் பலரையும், கல்விமான்களையும், சிறந்த சமய வாதிகளையும் உருவாக்கிய புண்ணியபூமி மல்லாகம். இத்தகைய சிறப்புமிக்க அறிஞர்களையும், மதவாதிகளையும் எமக்களித்துவரும் மல்லாகம் இந்துசமய அபிவிருத்திச் சங்கம் தனது 19வது ஆண்டு நிறைவுவிழா கொண்டாடுவதில் இந்துப் பெருமக்கள் பெருமையடைய வேண்டும்.

"இந்தச்சங்கம் பன்னெடுங் காலம் சேவைசெய்து பெரும் சாதனைகளை நிலை நாட்ட வேண்டுமென இவ்வேளையிலே இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன் 19 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஒரு இயக்கம் தன்னுடைய சேவையினை ஆற்றிவருவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும் அதுவும் சமய அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு இயங்குகின்ற இத்தகைய சங்கங்கள் இவ் விதமாக ஒரு தலைமுறை காலமாக இயங்கி வந்துள்ளமைக்கு நன்றி தெரிவிக்க வேண்டியது இந்துப் பெருமக்களாகிய எங்களது முக்கிய கடமையாகும்:

"எல்லாக் காலத்திற்கும் வழிகாட்டக் கூடிய அரிய ஞான வழிகளை உரிமையாளராகப் பெற்றநாம் அதனை மேலும் மேலும் பரவச் செய்வதற்கு இத்தகைய சங்கங்கள் மூலமாகவே ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். இப்போது உலகரீதியாகவே இந்துக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வருவதனைக் காணக் கூடியதாக உள்ளது. உலக இந்து மகா சபை இயக்கம், எமது சமயத்தை உலக ரீதியில் சிறப்புற வைப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது சமய அறிவையும், உணர்வினையும் சிறு வயதிலிருந்தே நாம் புகட்ட வேண்டும்" என்றார்.

மல்லாகம் இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. மகாதேவன் வரவேற்புரை நிகழ்த்தினார். மேற்படி கல்லூரி மாணவிகள் திருமுறைப்பாடல்களைப் பாடினார்கள்.

திருமதி பூ. துரைசுவாமி பரிசில்களை வழங்கினார்.

(கொ-ஈ)

# வடமராட்சிப் பகுதியில் அபிவிருத்தி வேலைகள்

(புலோலி)

வடமராட்சிப் பகுதியின் பின்தங்கிய பகுதிகளை அபிவிருத்தி செய்தவற்கான துரித நடவடிக்கைகளைப் பருத்தித் துறை எம். பி திரு கே. துரைரத்தினம் மேற்கொண்டுள்ளார்.

இப்பகுதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேகொள்வதற்கு முதலில் போக்குவரத்துவசதிகள் சீர்திருத்தப்படவேண்டுமென்பதால் இவ் பகுதி வீதிகளின் புனரமைப்பு வேலைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

இதற்கிணங்க மணற்காடு கரையூ வீதி எம். பி. திரு. துரைரத்தினத்தால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 1, 56, 000 ரூபா நிதியைக் கொண்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

பளை நிறைவேற்றுப் பொறியியலாளர் பகுதியினால் மேற்கொள்ளப்பட்ட இவ்வீதிப் புனரமைப்பு வேலைகளை ஒன்றரை மாத காலத்திற்குள் திருத்திப் புனரமைப்புச் செய்து பூர்த்தியாக்கியுள்ளது.

## க. பொ. த. ப. (சா|த) வகுப்புப் பரீட்சை - 1980

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1. | மாதிரி பீட்டுப் பயிற்சிக் கோவை (தமிழ் மொழி - பகுதி 1) | 2 - 50 |
| 2. | தொடர் மொழிப் பொருளுக்கு ஒரு சொல் | 1 - 80 |
| 3. | தமிழ் இலக்கிய வினாவிடை | 3 - 30 |

வெளியீடு: தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர்.

கிடைக்குமிடங்கள்;

1. ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
2. சண்முகநாதன் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

7259

## மலேசியா அலோர்ஸ்ரார் மேல் நீதிமன்றம்

விவாகரத்து மனு; இல. 5,1978

சுந்தரம்பிள்ளையின் மகள் தவமணிக்கும்
மனுதார்
கணபதிப்பிள்ளையின் மகன் அம்பிகாபதிக்கும்
எதிர்மனுதார்
இடையில்

சேரல்: கணபதிப்பிள்ளை மகன் அம்பிகாபதி, பொக்கணை ஒழுங்கை, ஊரெழு மேற்கு, சுன்னாகம் போஸ்ட், ஸ்ரீலங்கா

மேற்கு மலேசியா கெடாக், சுங்கேப்பட்டாணி பாத்துாவா இல: 569-ஐ சேர்ந்த சுந்தரம்பிள்ளை மகள் தவமணி விவாகரத்து கோரி மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார் என்பதை கவனத்திற்கு எடுத்துக்கொள்க. இதன்படி இந்த அறிவித்தல் வெளி வந்த ஒரு மாத காலத்திற்குள் மேற்கு மலேசியா அலோர்ஸ்ரார் மேல் நீதிமன்றத்தில் விவாகரத்து பதிவு பகுதியில் நீவிர் ஆஜராகி மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதில் தாக்க செய்யும்படி அறிவுறுத்தப்படுகின்றீர்.

இவ்வாறு நீர் செய்யத் தவறும் பட்சத்தில் நீதிமன்றம் சாட்சியங்களை விசாரித்து தீர்ப்பை வழங்கும்.

திருவாளர்கள் ஜெயதேவா கமால், பன்குனன்பாங்க் ரெக்யாட் (1-வது மாடி) ஜெலன் லங்கார், அலோர்ஸ்ரார் கெடாக், மேற்கு மலேசியா — மனுதார் சார்பான சட்டத்தரணிகள்.

ஒப்பம்
சிரேஷ்ட உதவி பதிவாளர்,
மேல் நீதிமன்றம்,
அலோர்ஸ்ரார், கெடாக்,
மேற்கு மலேசியா.

ஒப்பம்
மனுதார் சார்பான
சட்டத்தரணிகள்.

7253

## கம்பன் விழா இன்று

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் கல்லூரிகளுக்கான கம்பன் விழா, இன்று மாலை, யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில், மேற்படி கல்லூரி அதிபர் செல்வி. பத்மாசனி ஆறுமுகம் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் "கர்ப்பிணைக் கண்டனன்" என்ற தலைப்பில், யாழ்ப்பாண பல்கலைக் கழக சிரேஷ்டதமிழ்விரிவுரையாளர் கலாநிதி அ. சண்முகதாஸ் உரை நிகழ்த்துவார்.

"கணவனைக் கவர்ந்திழுத்த காரிகைகளுள் விஞ்சியவள், கைகேயியா? சீதையா? தாரையா?" என்னும் பொருளில் பட்டிமன்றமும் இடம் பெறும். பட்டிமன்றத்தில் கைகேயியின் சார்பில் திருவாளர்கள் ச. சிவராமலிங்கமும்; நா. சுப்பிரமணிய ஐயரும்; தாரையின் சார்பில், திருமதிகள் வசந்தா வைத்தியநாதனும்; மனோன்மணி சண்முகதாஸும், சீதையின் சார்பில், திருவாளர்கள் அ. குமரனும், இ. ஜெயராஜும் வாதிடுவர். (இ)

## கயரோக நிவாரண கொடித்தினம்

(புலோலி)

இலங்கைக்கயரோக தேசிய நிவாணச்சங்க வடமராட்சிக் கிளையின் கொடி தினத்தை வடமராட்சி வடக்கு கிழக்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும் மயிலும் ஆரம்பித்து வைத்தார்.

இவ்வாரம்பவைபவம் கிளைத் தலைவர் திரு. ஆ. க. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. திரு வயிரமுத்து திரு. வேலுப்பிள்ளை திரு. சேதுநாயகம் ஆகியோர் உட்பட இன்னும் பலர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் எண்ணெ அமைச்சர், துணை அமைச்சர் குழுவினரை ஈராக் படைகள் சிறைப்பிடித்தன

## உடன் டுதலை செய்யுமாறு ஈரான் அரசு வேண்டுகோள்

லண்டன் நவம்பர் 3

ஈரான்-ஈராக் யுத்தத்தில் அதிமுக்கிய சம்பவம் இப்போது இடம்பெற்றுள்ளது.

ஈரானின் எண்ணெத்துறை அமைச்சர் ஜனுப் முகம்மது ஜாவட் குலாய், மற்றும் எண்ணெத்துறை அமைச்சர். இந்த அமைச்சைச் சேர்ந்த நான்கு உயர் அதிகாரிகள் ஆகியோர் ஈராக் படைகளினால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர் என்று ஈராக் இராணுவ அறிக்கை தெரிவித்துள்ளது.

ஈரானின் முக்கிய எண்ணெ உற்பத்தி நகரான அபடானில் போரினால் சேதமடைந்த எண்ணெ உற்பத்தி நிலையங்களை அமைச்சர் தலைமையிலான குழு கடந்த வெள்ளியன்று பார்வையிட்டபோதே அக்குழுவினரை ஈராக் படையினர் சிறைபிடித்ததாக ஈராக் தெரிவித்தது.

அமைச்சர் குழு சிறைபிடிக்கப்பட்ட செய்தியை ஈரான் அதிபர் மாளிகையிலிருந்து வெளிவந்த அறிக்கை ஊர்ஜிதம் செய்தது.

சிறைபிடிக்கப்பட்ட குழுவினர் தற்போது ஈராக் தலைநகரான பாக்தாத்தில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் ஈராக் தெரிவித்துள்ளது.

### ஈரான் கோரிக்கை

இதேவேளையில் சிறைபிடிக்கப்பட்ட அமைச்சர் குழுவினரை உடனடியாக விடுதலைசெய்யும்படியும் அன்றேல் இது மீண்டும் சர்வதேச நெருக்கடியைத் தோற்றுவிக்கும் என்றும் ஈரான் கோரிக்கை விடுத்துள்ளது. (இ)

## ஐ. தே. கட்சி 26வது மாநாடு 20-ம் திகதி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் 26-வது வருடாந்த மாநாடு இம்மாதம் 20-ம் தேதி கொழும்பு சுகததாசா விளையாட்டுஅரங்கில் நடைபெறவிருக்கிறது.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையில் நடைபெறவிருக்கும் இம்மகாநாட்டில் ஒவ்வொருதொகுதியிலிருந்தும் 70 பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள்.

இவ்வருடம் ஜனவரி 31-ம் தேதி ஐக்கிய தேசியக்கட்சி தலைமைக்காரியாலயத்தில் பதிவுசெய்து கொண்ட இளைஞர்களின் பிரதிநிதிகள் மட்டுமே மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள் என கட்சியின் செயலாளர் திரு. ஹார்ஷா அபயவர்த்தன தெரிவித்தார்.

இம்மாநாட்டில் சமர்பிக்கப்படும் எந்தப்பிரேரணைகளும்

(8-ம் பக்கம் பார்க்க)

## பணயக்கைதிகள் விடுதலைக்கான ஈரானின் நிபந்தனைகள் நல்ல அடிப்படை கொண்டவை

### அமெரிக்க அதிபர் மகிழ்ச்சி

வாஷிங்டன், நவ. 3

அமெரிக்க பணயகைதிகளை விடுதலை செய்வதற்காக ஈரானிய பாராளுமன்றம் விதித்துள்ள நிபந்தனைகள் ஆக்கபூர்வமான அடிப்படையை அளித்துள்ளது.

இவ்வாறு அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் தெரிவித்துள்ளார்.

ஈரான் விதித்துள்ள நிபந்தனைகள் அமெரிக்க தேசிய கௌரவத்தை அடிப்படையாகக் கொண்டே ஏற்றுக்கொள்ளப்படுமென்றும்—

ஈரானின் நிபந்தனைகள் குறித்த விரிவான அறிக்கை ஒன்றைத் தாம் ஈரானிடமிருந்து எதிர்பார்ப்பதாகவும் திரு. கார்ட்டர் தெரிவித்தார்.

(7ம் பக்கம் பார்க்க)

### கார்ட்டர் வாஷிங்டன் திரும்பினர்

வாஷிங்டன், நவ. 3

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னமும் இரண்டு நாட்கள் மட்டுமே இருக்கும் இவ்வேளையில் பணயக்கைதிகள் விடுதலைக்கான ஈரானின் நிபந்தனைகளை அறிந்து ஆராயும் பொருட்டு அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் தமது தேர்தல் பிரசாரங்களை இடைநிறுத்திவிட்டு வாஷிங்டன் திரும்பியுள்ளார்.

ஈரானின் நிபந்தனைகள் குறித்து திரு. கார்ட்டர் நேற்று உயர் அதிகாரிகளுடன் இரு தடவைகள் பேச்சு நடத்தினர்.

### விமானம் தயார்

ஸ்டொக்ஹோம், நவ. 3

அமெரிக்கப் பணயக்கைதிகள் எந்நேரமும் விடுதலை செய்யப்படலாமென எதிர்பார்க்கப்படுவதால் சுவீடனின் தலைநகரான ஸ்டொக்ஹோம் விமானநிலையத்தில் 'டிசி-8' விமானம் ஒன்று ஈரான் செல்வதற்குத் தயாராகக் காத்திருக்கின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரத்தியேகமாக வாடகைக்கு அமர்த்தப்பட்ட இந்த ஸ்கண்டிநேவியன் விமானம் பணயக்கைதிகள் விடுதலைசெய்யப்பட்டதும் ஈரான் சென்று அவர்களை ஏற்றிக்கொண்டு அமெ

## அமெரிக்காவின் கைகளிலே விடுதலை தங்கியுள்ளது

### வால்ட்ஹெய்ம் கருத்து

நியூயோர்க், நவ. 3

பணயக் கைதிகள் விடுதலை அமெரிக்காவின் கைகளிலேயே தங்கியுள்ளது.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

பணயக்கைதிகள் விடுதலைக்கான நிபந்தனைகளை ஈரானிய பாராளுமன்றம் தீர்மானித்த பின்னர், ஈரானிய அதிகாரிகளுடனும் அமெரிக்கஅதிகாரிகளுடனும் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்ட பின்னர் நிருபர்கள் மத்தியில் பேசுகையிலேயே டாக்டர் வால்ட்ஹெய்ம் மேற்கண்டவாறு கூறினார்.

பணயக் கைதிகள் விடுதலைக்கு முன்னெப்போதையும் விட இப்போது மேலும் நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது என்று டாக்டர் வால்ட்ஹெய்ம்கருத்துத் தெரிவித்துள்ளார். (இ)

### அணிசேரா நாடுகள்

## நல்லெண்ணக்குழுவிலிருந்து அல்ஜீரியா திடீர் விலகல்

பெல்கிரேட், நவ. 3

ஈரான்-ஈராக் போரைச் சமாதானமாகத் தீர்த்துவைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அணிசேரா நாடுகள் நல்லெண்ணக் குழுவிலிருந்து அல்ஜீரியா நேற்றுத் திடீரென விலகிக் கொண்டது.

இதற்கான காரணம் எதையும் அல்ஜீரியா தெரிவிக்கவில்லை.

இதேவேளை இந்த நல்லெண்ணக் குழுவில் அங்கம் வகிக்கும் பாகிஸ்தான், கியூபா, ஸாம்பியா, யூகோஸ்லாவியா ஆகிய நாட்டுப் பிரதிநிதிகள் நேற்று பெல்கிரேட்டில் கூடி ஈரான்-ஈராக் நெருக்கடி குறித்து ஆராய்ந்தனர். இன்றும் இவ்விஷயம் குறித்து ஆராய்ந்தனர். (இ)


பல பயன் தரும் சென்றிமியூகல் பம்ப்

டெல்டரிக்

பம்ப் செற் ஈ. எஸ். 25 எம்.

கொண்டு குறைந்த செலவில் குழாய் நீர் பெறுங்கள்.

யாப்பானில், கேற்றே பம்ப் மனுபக்சரிங கம்பனி லிமிட்டெட்டினால் இலங்கைக்கென விசேடமாகத் தயாரிக்கப்பெற்ற பம்ப் வெண் கலத்தாலான உற்று கருவ் கொண்டது.



கையிருப்பில் உண்டு ரு. 1350/-

உறிஞ்சி ஏகும் நீர்வாயின் அளவு 1" அதிகபட்ச மொத்த நீளம் 90 அடி அதிகபட்ச இறைப்பு ஆற்றல் மணிக்கு 1000 கலன். எமது பொறியியல் பகுதி சிறப்பான விற்பனைக்குப் பிற்பட்ட பராமரிப்புச் சேவை வழங்குகிறது. மாற்றுறுப்புகள் யாவும் கைவசமுண்டு

டெல்மேஜ் போசைட் அன்ட் கம்பனி லிமிட்டெட்

101, விஜயலங்கார மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 93361-7.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அறிவித்தல்

தீபாவளி தினத்தை ஒட்டி 6-11-80 வியாழக் கிழமை 'ஈழநாடு' காரியாலயத்துக்கு விடுமுறை ஆதலால், மறுநாள் 7-ம் திகதி வெள்ளிக் கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவராது என்பதை வாசகர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

(ஆ-ர்)

### மணிவாக்கு

கடவுளைப் பற்றிய தத்துவ ரகசியங்களை அறிய நீ சிரத்தை நிறைந்தவனாக இருப்பாயாகில் அவரே சற்குருவை உனக்கு அனுப்பி வைப்பார். குரு ஒருவரைக்காணத் தேடி அலைய வேண்டிய சிரமம் உனக்குஇராது.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

## நமது நோக்கு

### குளிக்கப்போய்...

யாழ். மாநகரசபை சுகாதாரவிழா மிகச் சிறாகமுடிந்ததும் எமக்குக் கிட்டுஞ் செய்தி பெரும் ஏமாற்றம் அளிக்கிறது.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியின் சுகாதாரச் சீர்கேட்டையே நாம் இங்கு குறிப்பிடுகின்றோம்.

உணவுக்குச் சுவையூட்டும் உப்பு தன் பண்பை இழந்துவிட்டால் உணவுக்குச் சுவை ஏது என்பது விவிலிய வாக்கு.

மருத்துவவிதி எதுவானாலும், மருத்துவசாலை எதுவானாலும் சுகாதாரத்துக்கு முன் மாதிரியாக இருக்குமிடம் என்பதே எவரும் எதிர்பார்க்கவேண்டியது. இதற்கு முழுமாறுசுகாட்சியளிப்பது எங்கள் தலைநகரின் தலைசிறந்த ஆஸ்பத்திரியாகத் திகழவேண்டிய பெரியாஸ்பத்திரியாகும்.

இந்த அபாய நிலைமையைப் பரிசீலனை பண்ணிய ஆஸ்பத்திரிக்குழு மிக விரிவான ஆராய்ச்சி நடத்தியிருப்பதாகச் செய்தி கூறுகின்றது.

சொஸ்தாபனங்கள் பற்றி வீண் கண்டனங்கள், பொய்வதந்திகள் முதலிய ஆதாரமற்ற குறைபாடுகள் பேசுவதில் எங்கள் மக்கள் எவருக்கும் சளைப்பதில்லை. துரும்பை எடுத்துத் தூணைக்குவதில் அவர்கள் திறமை வாய்ந்தவர்களுங்கூட. ஆயினும் நாம் குறிப்பிடும் ஆஸ்பத்திரிக்குழுவும், அதன் பிரதம நிர்வாகிளும்சாமான்ய மானவரல்லர். எனவே அவர்கள் ஆஸ்பத்திரியின் சுகாதாரச் சீர்கேடுபற்றி நிர்வாகத்தினருக்கு எச்சரிக்கைவிடுவதானால் நிலைமை எவ்வாறென்பதை நாம் ஊகித்தறிய முடியும்.

அம்மை, பேதி போன்ற பயங்கர தொற்றுநோய்களுக்கு, 'ஐ. டி. எச்.' என்னும் பிரத்தியேகமான மருத்துவமனை மனித சஞ்சாரத்துக்கு அப்பாற்பட்ட இடத்தில் நாட்டின் சில பாகங்களில் அமைக்கப்பட்டிருக்கிறது.

மக்கள் மத்தியில், நகரத்தின் கேந்திர ஸ்தானத்தில் அமைந்திருக்கும் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி 'ஐ.டி எச்' (Inf ctious Des ases Hospital) ஆகமாறும் அபாயம் ஏற்படுமானால் நோயாளிகளின்நிலை என்ன? ஒரு நோய்க்கு நிவாரணந் தேடிப் போகின்றவர்பலநோய்களை வீடுகொண்டுவரும் 'பாக்கியம்' பெற்றவராவார்.

நீரடைப்பு, சீர்கெட்ட மலசலகூடங்கள், நல்லதண்ணீர்க் கிணறுகளும் சாக்கடைகளும் இரண்டறக் கலக்கும் அபாயம், குழாய் நீர் வீண்விரயம்- இவை போன்ற பல குறைகள் நோய்கள் பரப்பும் சாதனங்களாக மாறுமென்ற அச்சம் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

சுகாதாரச்சீர்கேடு ஒருபுறமிருக்க, ஆஸ்பத்திரிக்கு அத்தியாவசியமானஎக்ஸ்ரே போன்ற சாதனங்கள் பழுதடைந்தால் அவற்றைத் திருத்தும் பணி பிந்போடப்பட்டு நோயாளிகளை வெளியிடங்களுக்குத் திருப்பி அனுப்பும் வழக்கம் இருந்து வருவதாகவும் முறைப்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

மாவட்டத்தின் மருத்துவ தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் பொறுப்புடைய இப்பெரிய ஸ்தாபனம் இம்முறையில் திறமையற்று இயங்கிவருவது நன்கு விசாரிக்கப் படவேண்டிய விடயம்.

கண்டனஞ் செய்வதும் குற்றஞ்சாட்டுவதும்எளிது. இவை யெல்லாவற்றிற்கும் அடிப்படையான காரணங்கள் யாவை என்றறிந்து அவற்றை நீக்க அதிகாரிகளும் ஆஸ்பத்திரிக் குழுவும் ஒன்றுசேரவேண்டும்.

நாடு முழுவதிலுமே நிர்வாகச்சீர்கேடு ஒரு சாபக்கேடுபோல் தெரிகின்றது. போதிய டாக்டர்கள், தாதிகள், உபகரணங்கள் இல்லாமலிருப்பது ஓர் அதிசயமான புதினமல்ல.

ஆயினும் சுகாதாரத்துக்கு அத்தியாவசியமான விழிப்புணர்வு, பொறுப்புணர்வு, நிர்வாகத்திறமை, ஆஸ்பத்திரி முதல்வர் தொட்டு, சுத்தி செய்யும் தொழிலாளர்கள்வரை நிலவும் ஒத்துழைப்பு எங்கும் என்றும் தளர்ச்சியின்றி திறம்பட நிலவ வேண்டியவை.

# அமெரிக்க அதிகாரபதவிக்கு போட்டியிடும் 5 மனிதர்கள்

— பற்றிமாகரன் —

ஜிம்மிகார்ட்டர், டொனல்ட்றீகன், ஜோண் அண்டர்சன் வால்டர் மோன்டலி, -ஜோர்ஜ்புஷ் எனும் ஐந்துபெயர்களையும் தாங்கிவராத பத்திரிகை ஒன்றை இன்று நாம் காணமுடியாது. முதல் மூவரும் அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கும் பின் இருவரும் உதவி ஜனாதிபதி பதவிக்கும் போட்டியிடும் வேட்பாளர்கள் என்று உலகின் எந்த ஒரு அரசியல் அறிவுள்ள குடிமகனும் பளிச்சென சொல்வான், உலகின் முக்கிய மனிதர்களாகத் திகழும் இவ் ஐவரைப் பற்றியும் நாமும் சிறிது அறிவது நல்லதல்லவா?

### ஜிம்மி கார்ட்டர்

ஜிம்மி என அன்பாக அழைக்கபடும் ஜிம்மி கார்ட்டர் 1924ம் ஆண்டு ஐப்பசி 1ம் திகதி அமெரிக்காவின் ஜியோஜோர்ஜியா மாநிலத்திலுள்ள பிளய்ன்ஸ் எனும் இடத்தில் பிறந்தவர். ஐப்பசி பிறப்புகள் யாவும் பெருமை படைத்தவை எனும் ஆங்கில முதுமொழிக்கேற்ப இவர் இன்று அமெரிக்காவின் ஜனாதிபதி ஸ்தானத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கிறார், இவருடைய தந்தை ஜேம்ஸ் ஏர்ல் கார்ட்டர் ஒரு விவசாயி. அத்துடன் விவசாய உற்பத்தி நிலையம் ஒன்றையும் நடாத்தி வந்தார். 1953ம் ஆண்டில் தந்தையின் மறைவை அடுத்து ஜிம்மி கார்ட்டர் தந்தையின் விவசாய உற்பத்தி நிலையத்தைப் பொறுப்பேற்று கச்சான் வியாபாரம் நடாத்தி வந்தார்.

ஆனால் ஜிம்மி கார்ட்டர் ஒரு பட்டதாரி. கடற்படை கல்லூரியில் 1946ல் 829 பட்டதாரி மாணவர்களுள் 59 வது மாணவனாக முன்னணியில் நின்று புகழ்பெற்றவர். இவருடைய ஏழுவருட சப்பல்துறை வாழ்க்கையில் உலகின் முதலாவது அணுசக்தி நீர்மூழ்கியை உருவாக்குவதில் இவர் இவரது சகாக்களுடன் ஆற்றிய பணி போற்றப்படக் கூடியது. சிறந்ததோர் கப்பல் வல்லுனராக இவர் திகழ்ந்தபோதும் தந்தையின் மறைவை அடுத்து 1953ல் குடும்பப் பொறுப்பையும் குடும்ப விவசாய உற்பத்தி நிலையத்தையும் நடாத்த வேண்டியிருந்ததால் இவர் கப்பல் துறைக்கு முற்றுப் புள்ளி வைத்தார். விவசாயத் தொழில் நுட்பங்களில் தேறி தந்தையின் விவசாய உற்பத்தி நிலையமான கச்சான் வியாபாரத்தை வெற்றிகரமாகக் கொண்டு நடத்தினார். தாயாரான லில்லியன் வாசிப்பதன் மூலமே ஒரு பூரண மனிதன் உருவாவான் என்பதை உணர்த்தி கார்ட்டரது வாசிக்கும் தன்மையை வளர்த்து வந்தார்.

சமூகசேவையிலும் கிறீஸ்தவ மதப்பணியிலும் நாட்டம் காட்டி வந்த கார்ட்டர் 1962ல் இவரது தாயகமான ஜோர்ஜியா மாநில செனட்டராக அரசியல் வாழ்வை ஆரம்பித்தார். இம்மாநில கவர்னர் பதவிக்கான தேர்தலில் 1966ல் தோல்வி அடைந்த கார்ட்டர் அடுத்து வந்த நான்கு ஆண்டுகளிலும் அரசின் பிரச்னைகளைப் படித்து உணர்வதிலேயே செலவிட்டார். இக்காலகட்டத்தில் இவர் நிகழ்த்திய 1800 மேடைப் பேச்சுகளே 1960ல் இம்மாநிலக் கவர்னராக்கியது. இரண்டு முறைக்கு மேல் கவர்னர் பதவியை தொடர்ச்சியாக வகிக்க முடியாது. எனும் அரசியல்அமைப்புக்கேற்ப கவர்னர் பதவியை விட்டு விட்ட கார்ட்டர் ஜனாதிபதி பதவி நோக்கி தாவினார் அச்சமயம் இவரை இவரது மாநிலம் தவிர்ந்த ஏனைய அமெரிக்க மாநிலங்கள் நன்கு அறியாத போதிலும் வெற்றிகரமாகத் தனது தேர்தல் பிரச்சாரத்தை நடாத்தி ஜெரால்ட் போர்ட்டை தோற்கடித்து 1976ல் வெள்ளைமாளிகையின் ஜனாதிபதியானார்.

### டொனல்ட்றீகன்

1911ம் ஆண்டு மாசி மாதம் 06ம் திகதி சப்பாத்து விற்பனையாளரான ஜோன் எட்வேர்ட்டின் மகனாக இலியோனியஸ் மாநிலத்திலுள்ள டம்பிக்கோ என்ற இடத்தில் பிறந்த டொனல்ட்றீகன் 1932ல் பொருளியல் சமூகவியல் துறையில் இளமானிப் பட்டத்தைப் பெற்றார், வானொலி அறிவிப்பாளராக வாழ்வை ஆரம்பித்த இவர் 1937ல் ஹலிவூட்டில் பிரவேசித்து புகழ்பெற்ற நடிகரானார்.

1942ல் சினிமா நட்சத்திரமாக ஜொலித்த இவரை இராணுவ சேவை அழைத்தது. இரண்டாம் உலக யுத்தத்தில் இராணுவப் பணியாற்றிய பின் மீளவும் 1947ல் ஹலிவூட்திரும்பி திரைப்பட நடிகர் மன்ற தலைவராகத் திகழ்ந்தார். 1952ல் டெலிவிஷன் யுகம் ஆரம்பமான பின் டெலிவிஷன் நாடகங்களை நடாத்துவதுடன் ஊரெங்கும் சுற்றுப் பயணம் செய்து ஜெனரல் எலக்றிக் கம்பெனி எனும் தொலைக்காட்சி அமைப்புக்கு துணை செய்யும் கம்பெனியின் தொழிலாளர்களின் கூட்டங்களையும் நடாத்தி வந்தார். 1962 வரை இவ்வாறாக சினிமா தொலைக்காட்சிமூலம் அமெரிக்கா மக்களிடம் புகழ்பெற்றார்.

இவர் ஜனநாயககட்சிக்கு அளித்து வந்த தனது ஆதரவை 1960 களில் குடியரசு கட்சிக்கு மாற்றினார். குடியரசுக்கட்சித்தலைவர்கள் இவரின் புகழையும் பணபலத்தையும் கண்டு இவரை பொதுசனத் தொடர்புக்குச் சிறந்த காரணியென முடிவுசெய்து தங்களின் முக்கிய அபேட்சகராக மாற்றிக் கொண்டனர். கலிபோனியா உயர் அலுவலர் பதவித் தேர்தலில் 1966-ல் பத்து லட்சம் மலதிக வாக்கால் வெற்றியீட்டியவர் இவர். 1976-ல் ஜனாதிபதி வேட்பாளராக குடியரசுக் கட்சியின் நியமனத்தை இவர் பெறமுயன்றபோதிலும் ஜெரால்ட் போர்ட்டிடம் தோல்விகண்டார். இம்முறை மீளவும் சக்திபடைத்த ஜனாதிபதி வேட்பாளராக குடியரசுக்கட்சியின் நியமனத்துடன் ஜிம்மி கார்ட்டருடன் மோதுகின்றார்.

### ஜோன் அண்டர்சன்

1922-ம் ஆண்டு மாசி 15-ம் இலியோனியஸ் மாநிலத்திலுள்ள ரொக்போர்ட் எனும் ஊரில் பிறந்த ஜோன் அண்டர்சன், பள்ளிக்கூடம் இல்லாத நேரங்களில் தனது தந்தையான அல்பினின் சிறிய பலசரக்குக் கடைக்கு உதவியாளராக வளர்ந்தார். பல்கலைக்கழகம் புகுந்த இவர் தலைசிறந்த மாணவனாக மிளிர்ந்தார். நீதிப்புனராய்வுத் துறையில் கலாநிதி பட்டமும், சட்டத்துறையில் முதுமானிப்பட்டமும் பெற்ற இவருக்கு இரண்டாவது மகாயுத்தத்தில் 2½ வருட இராணுவ அனுபவமும் உண்டு. வழக்கறிஞராகப் பல வருடங்கள் பயிற்சி செய்த இவர், 1952-ல் அமெரிக்க வெளிநாட்டுச் சேவையில் சேர்ந்தார். ஆயினும் 1952-ல் மீளவும் வழக்கறிஞர் பயிற்சிக்கே திரும்பிவிட்டார்.

1956-ல் கவுண்டி அட்டோர்னி ஜெனரல் தேர்தலில் வென்றதன் மூலம் அரசியல் பிரவேசம் செய்த இவர்,1960ல் மக்கள் பிரதிநிதிகள் சபை உறுப்பினராகவும் தெரிவானார். சிறந்த பேச்சாளரும், சட்ட நிர்வாகியுமான ஜோன் அண்டர்சன் அம்முறை முதலில் குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமனம் பெற முயற்சித்தார். அது கைகூடாமல் போகவே சுயேச்சை வேட்பாளராக இம்முறை ஜனாதிபதி தேர்தல் களத்தில் குதித்துள்ளார்.

### உப ஜனாதிபதி வேட்பாளர்கள்

ஜிம்மி கார்ட்டரின் ஜன

(8-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### சீதனப் பேயை ஒழிக்க...

அண்மைக்காலத்தில் சீதனக் கொடுமை பற்றி 'ஈழநாடு' பத்திரிகையில் பல விமர்சனங்கள் வெளிவந்து விட்டன.

ஊர்சுற்றியாரும் 80-10-01 சீதனப் பிரச்சனையால் மனமுடைந்த சகோதரர் ஒருவர் தற்கொலை செய்ததைப் பற்றி எழுதி, சீதன முறை ஒழித்துக் கட்டப்பட வேண்டியது பற்றிக் குறிப்பிட்டுள்ளார்

இது வரவேற்கப்படவேண்டிய ஒன்றே. ஆனால் இதற்கு நாம் தேடும் பரிகாரம் போதுமானதாக இல்லை.

சீதன முறையை ஒழிப்பதற்குச் சீதனம் வாங்குவோரையும், கொடுப்போரையும் மாத்திரம் கண்டிப்பதனால் பயனில்லை. கீழ்க்கண்ட காரணங்களையும் மனதிலிருத்தி நடவடிக்கைகள் மேற்கொண்டால் ஓரளவு பயன் பெறலாம்.

1. தற்பொழுது தமிழ் மக்களிடையே, தரப்படுத்தல் முறைகளினாலும், மற்றும் பல வகைகளினாலும் பாதிக்கப்பட்டுள்ள இளைஞர்கள் பலர் விவசாயத்திலும், வியாபாரத்திலும், மற்றும் பல சுய முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர். உத்தியோகம் பார்க்கும் இளைஞர் மிகக் குறைவு. இதிலும் அரசாங்கத்தில் உத்தியோகம் பார்ப்போர் மிகமிகக் குறைவு. ஆனால் நமது இளம் பெண்களில் அநேகர், தோட்டக்காரரின் மகளாயிருந்தாலென்ன, வியாபாரஞ் செய்பவரின் மகளாயிருந்தாலென்ன, உத்தியோகஞ் செய்பவரின் மகளாயிருந்தாலென்ன எல்லோரும் விரும்புவது மேல் நாட்டுப் பாணியில் காற்சட்டை, சேட் அணிந்து உத்தியோகத்திலிருப்பவரையே!. இதிலும் அரசாங்க உத்தியோகமாயிருந்தால் அதற்கு ஒரு தனி மதிப்பு. இந்த ஆண்பிள்ளை உழைக்கும் சம்பளம், தோட்டத்தில் வேலை செய்யும் இளைஞன் ஒருவனின் சம்பளத்தை பார்க்கிலும், பட்டினச்கும் ஒரு இளைஞனின் வருமானத்தைப் பார்க்கிலும் மிகக் கேவலமாயிருப்பினும், இப்பெண்களில் அநேகர் விரும்புவது காற்சட்டை போட்ட உத்தியோகத்திலுள்ள ஒரு இளைஞனையே.

2. மேலும் முன்னரைப் போலல்லாது, தற்காலத்தில் பல பெண்களும் படித்து உத்தியோகம் பார்க்கின்றனர். இவர்கள் விரும்புவதும், தங்களிலும் பார்க்க மேலான உத்தியோகத்திலுள்ள ஆண்களையே.

இக்காரணங்களினாலும், இப்பெண்களின் கனவுலகை நனவாக்குவதற்காகவும் பல பெற்றோர் தங்கள் உத்தியோகமோகங் கொண்ட பெண்களுக்கு கொள்ளை கொள்ளையாகச் சீதனம் கொடுத்து உத்தியோகத்திலுள்ள ஒரு சில ஆண்பிள்ளைகளையும் தங்கள் பெண் பிள்ளைகளுக்கே மணம் முடிக்க விரும்புகின்றனர். இதனால் உத்தியோகங்களிலுள்ள ஆண் பிள்ளைகளின் பெற்றோரும் தங்கள் பிள்ளைகளுக்குப் பேரம் பேசி கூடியளவு சீதனமாகப் பெற்றுக் கொள்கின்றனர். இது இன்று குறிப்பாகத் தமிழ் மக்களிடையே பெரும் போட்டியாக வளர்ந்து விட்டது.

இவற்றைத் தவிர்ப்பதற்கு பின்வரும் ஆலோசனைகளை கூறலாம்.

1 மேனாட்டு நாகரீக மோகத்தையும், காற்சட்டை சேட் அணிதையும் இனியும் மதியாது, நமது நாகரீகத்துக்கும், நமது உடைகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும்.

2. இளம் பெண்கள் விவசாயம் செய்யும் ஆண்களையும் வியாபாரஞ் செய்யும் ஆண்களையும் நிராகரியாது விரும்புதல் வேண்டும்.

3. படித்து உத்தியோகங்களிலிருக்கும் பெண்களும் மேற்கூறிய ஆண்பிள்ளைகளுக்கே மதிப்பளிக்க வேண்டும். அது முடியாவிட்டால் தங்களிலும் பார்க்க மேலான உத்தியோகத்திலுள்ள ஆண்பிள்ளைகளை விரும்புவதையாதல் கூடியவரை தவிர்த்தல் நலம்.

ஏ. கலைவாணி
...டித்தெரு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### "வேலையற்ற இளைஞர்கள்

# அரசின் இலகுகடன்களை உடன் பயன்படுத்த வேண்டும்"

## இலங்கைவங்கி யாழ். மாவட்ட முகாமையாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

"வேலையற்றிருக்கும் இளைஞர்கள் நாட்டிற்கும் தமக்கும் பயனளிக்கும் திட்டங்களில் ஈடுபட முன்வந்தால் மாத்திரமே நாடு அபிவிருத்திப் பாதையிலே வேகமாகச் செல்ல முடியும். அரசாங்கம் வழங்கியுள்ள இலகுவான கடன்களைப் பயன்படுத்தி இளைஞர்கள் ஆக்கபூர்வமான வேலைகளில் உடனடியாக ஈடுபடவேண்டும்."

இவ்வாறு இலங்கை வங்கி யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. மு. கனகரத்தினம் தொல்புரம் மெய்கண்டான் வித்தியாலயத்தில் 10 தினங்களாக நடந்து வருகின்ற வர்த்தகத்தில் இளைஞர் பயிற்சித் திட்டத்தின்கீழ் செயற்படும் பிராந்திய பயிற்சித் திட்டத்தின் 6.ம் நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகையில் கருத்துத் தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவை மன்றம் நடாத்தும் இப் பயிற்சித் திட்டத்துக்கான நிகழ்ச்சிகள் திரு. சிவதட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் இளைஞர்கள், யுவதிகள் கலந்துகொண்டனர்.

தேசிய இளைஞர் சேவை மன்றமும் இலங்கை வங்கியும் கூட்டாக இணைந்து செயல்படுகின்ற கடன் வழங்கும் திட்டத்தை விளக்கிய திரு. கனகரத்தினம் இத்திட்டம் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்டும்யாழ் மாவட்டத்தில் இதுவரை காலமும் ஒருவரும் கடன் பெற வழிவகை செய்யப்படவில்லை. இந்தத் திட்டத்தில் தேசிய இளைஞர் சேவை மன்றம் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும்" என்றார்-

"நல்லதிட்டங்களை அமைத்து அவற்றை இலாபகரமாக இயங்கச்செய்வதால் அது எவ்வாறு தேசிய அபிவிருத்திக்கும், வேலையில்லாப்பிரச்னையை நீக்குவதற்கும் உதவிசெய்யும் என்பதை விளக்கிக்கூறிய அவர் இளைஞர்கள் ஒரே மனத்துடன் இந்தத் துறையில் இறங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இப்பயிற்சித் திட்டத்தில் கலந்துகொண்ட இளைஞர்களின் கேள்விகளுக்கு திரு. கனகரத்தினம் அளிக்கையில் ஒவ்வொரு சிராமத்திலும் காணப்படும் உள்ளூர் மூலப் பொருட்களைக் கண்டுபிடித்து சிறுகைத்தொழிலை நடாத்த முன்வரும் இளைஞர்களுக்கு இலங்கை வங்கி கடனுதவி வழங்க முன்னிற்கும் என்பதையும் வலியுறுத்தினர்.

(கொ-ஈ)

## "சமயநெறிப்படி வாழ்ந்தால் கடவுளை அடையலாம்"

(யாழ்ப்பாணம்)

"விஞ்ஞானம் விளக்க முடியாத பலவற்றை விளக்கவல்லது இந்துசமயம். விஞ்ஞானமும் மெஞ்ஞானமும் ஒன்றே அகம் புறம் ஆய்வுகள் தான் விஞ்ஞானமும் மெய்ஞானமும் ஆகும்.

அல்லாரை அறுகம்புலம் மகா கணபதிப்பிள்ளையார் கோவில் 13-வது ஆண்டுக் கூட்டுப்பிரார்த்தனை விழாவில் சிறப்புரை நிகழ்த்திய பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கண்டவாறு கூறினர்.

திரு. மு' காசித்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் கூட்டுப்பிரார்த்தனைச் சபையாரால் நடாத்தப்பட்ட சமய அறிவுப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு வித்துவான் சைவப் புலவர் கு வி. மகாலிங்கம் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

உலகம் உய்யத்தோன்றியது விநாயக பரத்துவம் வழிபாடு செய்து நாம் வாழ்வாங்கு வாழவே கடவுள் சகலரையும் படைத்துள்ளார். நாம் சமய நெறிப்படி நின்று ஒழுகுவதன் மூலம் கடவுளை அடையமுடியும் ஆகவே நாம் சமய நெறிப்படி வாழப்பழகிக் கொள்ள வேண்டும் என்றார்.

திருவாளர்கள் க. சந்திரசேகரம். சி. துரைராஜா, க.கணபதிப்பிள்ளை, க. தம்பு டாக்டர் ச. நமசிவாயம் திருமதிகள் சி. உமையம்மை நேயப்பிரேமா உட்படபலர் உரையாற்றினர் பண்ணிசை நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

(கொ-ஈ)

### பொதுப்பரீட்சை நடத்த நடவடிக்கை

(புளியங்குளம்)

வவனியா மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் மூன்றும் வகுப்பு முதல் க. பொ, த. சாதாரண வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கான வகுப்பேற்றப் பரீட்சையைப் பொதுப்பரீட்சையாக நடாத்துவதுபற்றி வவனியா மாவட்டப் பிரதம கல்வி அதிகாரி திரு. எம், சிமியாம்பிள்ளை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

(அ)

### இன்று நடவடிக்கைக்குழு கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

தொழிற்சங்க நடவடிக்கைக்குழு இன்று மாலை 6மணிக்கு கூடி 11ம்திகதி நடைபெறவிருக்கும் தேசிய எதிர்ப்பு தினம் பற்றி இறுதி முடிவு எடுக்கவிருக்கிறது. இதில் அரசியல்கட்சிகளும் வெகுஜன இயக்கமும் பங்குபற்ற விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### சிரமதான விழா

(துணுக்காய்)

வவனிக்குளம் மகாவித்தியாலயத்திற்கு முன்பாகவுள்ள விளையாட்டு மைதானத்தினைத் திருத்தி அமைப்பதற்கான சிரமதான வைபவம் அண்மையில் துணுக்காய் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. மு. கார்த்திகேசு தலைமையில் நடைபெற்றது.

இச்சிரமதான வைபவத்தை வவனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு. வே. ஜெயராஜ் ஆரம்பித்து வைத்தார். பிரதம அதிதியாக வவனியா பிரதம கல்வி அதிகாரி திரு. எம்.சிமியாம்பிள்ளை கலந்து கொண்டார். பாடசாலை மாணவ, மாணவிகள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் ஆகியோரும் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். பாடசாலை அதிபர் திரு. த. சிவபாலு இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார்.

(ஈ)

### மேலும் அவகாசம்

(சுழிபுரம்)

இந்துசமய அமைச்சு இதுவரை பதிவுசெய்துகொள்ளாத சமய நிறுவனங்களுக்கு ஒரு விசேஷ சலுகையாக மேலும் அவகாசம் கொடுத்துப் பதிவு செய்துகொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.

அவ்வப்பகுதிக் கிராமசேவை அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு படிவங்களை ஏற்றுப் பதிவு செய்துகொள்ளுமாறு இந்நிறுவனங்கள் கேட்கப்பட்டுள்ளன. பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கே விசேஷ சலுகைகள் வழங்கப்படவுள்ளது.

"ஊக்கமும் உதவியும் கிடைததால

## நமது நாட்டில்பல விஞ்ஞானிகள் உருவாவர்"

புலோலி)

"விஞ்ஞானச் சஞ்சிகைகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிகோலிகளாக அமையவேண்டும். அப்போதுதான் அச்சஞ்சிகைகள் மூலம் சிறந்த பலனைப் பெற முடியும்".


இவ்வாறு ஆசிரியபயிற்சிக் கலாசாலை விஞ்ஞான மன்றத்தின் சஞ்சிகையான "சுடர்" வெளியீட்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டுஉரையாற்றிய யாழ். பல்கலைக்கழக விலங்கியற் றுறைப் பேராசிரியர் திரு. வி. கே. கணேசலிங்கம் குறிப்பிட்டார்.

திரு வி. நமசிவாயம் தலைமையில் ஆசிரியபயிற்சிக் கலாசாலை சினிமா மண்டபத்தில் நடைபெற்ற இவ்வெளியீட்டு விழாவில் தொடர்ந்து உரையாற்றிய பேராசிரியர் கணேசலிங்கம் குறிப்பிட்டதாவது: நமது மக்கள் மத்தியில் விஞ்ஞான அறிவுகளை மேம்படுத்தி விஞ்ஞான ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். எமது இளைஞர்களில் பெரும்பாலானோர் விஞ்ஞானத்துறையில் ஈடுபட்டு வருகின்றபோதிலும் அவர்களுக்குப் போதிய ஊக்கமும் உதவிகளும் கிடைப்பதில்லை. அவர்களுக்கு வேண்டிய உதவிகளும் போதிய ஊக்கமும் வழங்கப்பட்டால் எதிர்காலத்தில்நமது நாட்டில் பல விஞ்ஞானிகள் உருவாகுவார்கள்.

இன்றைய மனித வாழ்க்கையில் விஞ்ஞானத் தேவைகள் மிகவும் ஒன்றி இணைந்துள்ளன' எமது மத்தியிலுள்ள சில மூடக்கொள்கைகள் எமது சமுதாயத்தைத்தவறானபாதையில் இட்டுச் செல்கின்றன விஞ்ஞான சஞ்சிகைகள் இம்மூட நம்பிக்கைகளைக் களையும் மருந்தாக அமையவேண்டும்.

சஞ்சிகை வெளியீட்டு விழாவில் முதலாவதுசுடர் சஞ்சிகையை கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரி அதிபர் திரு. கே. சிவபாதசுந்தரம் ஆசிரிய கலாசாலை விஞ்ஞான பீடத்தலைவர் திரு. கே. வி. நடராசாவிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்களான திருசுப்பிரமணியஐயர், திரு இரகுபதி ஆகியோரும் உரையாற்றினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சுதந்திரத்தை மீட்டுஎடுக்கவே விடுதலை இயக்கத்தை உருவாக்கினோம்"

## பண்டாரவன்னியன் விழாவில் திருகோணமலை எம்.பி. உரை

(வவுனியா - புளியங்குளம்)

முப்பத்து மூன்று வருடங்களின் முன் இலங்கை மக்களுக்கு ஆங்கிலேயர் சுதந்திரம் வழங்கியபோது தமிழ மக்களின் சம்மதமின்றி அதிகாரமும் ஆட்சி உரிமையும் சிங்களவர்களிடம் கொடுக்கப்பட்டது. அன்று முதல் மாறி மாறி ஆண்டு வந்த அரசியல் கட்சிகள் தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்து வந்துள்ளன. இதிலிருந்து விடுபட்டு தனித் தேசிய இனமாக எமது இறைமையைக் காத்து எம் சுதந்திரத்தை மீட்டு எடுக்கவே நாம் ஒன்றிணைந்து விடுதலை இயக்கத்தை உருவாக்கினோம்.

இவ்வாறு திருகோணமலை எம். பி திரு. இரா. சம்பந்தன் நெடுங்கேணியில் நடைபெற்ற பண்டாரவன்னியன் நினைவு தினவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. வி. குகராசா தலைமையில் நடைபெற்ற அக் கூட்டத்தில் திரு. சம்பந்தன் தொடர்ந்து பேசுகையில், கூறியதாவது தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து விடுதலைக்காக ஓர் இயக்கத்தின் கீழ் நாம் இயங்குகையில் எம்மிடையே அபிப்பிராய பேதங்கள் ஏற்படுவது வழக்கம். எமது குறைகள் திருத்தப்படுவதற்காகச் சுட்டிக்காட்டப்படுவதை நாம் வரவேற்கிறோம். ஆனால் இக்கட்டான நெருக்கடி நிலைமைகளில் எமது அமைப்பின் மூல சக்திகள் மேற்கொள்ளும் முடிவினை இயக்கத்தின் கட்டுக்கோப்பிற்கு அமைய ஏற்றுக் கொள்ளும் நல்ல மனப்பான்மை எம்மிடையே இருப்பது மிக மிக முக்கியம். அதற்கு அமைந்து நடப்பது அத்தியாவசியம். எந்த நேரத்திலும் எவ்விடத்திலும் எத்தகைய காலகட்டத்திலும் எமது தமிழ் இனத்தின் ஒற்றுமையைக் குலைத்து எம்மை அழிக்க முற்படும் காக்கை வன்னியர்களை இனங் கண்டு மிகவும் பொறுப்புடன் அவதானமாகச் செயற்படுதல் வேண்டும். இதை நாம் அனைவரும் நன்கு உணர்ந்து செயல்பட்டால் எமது இலட்சியம் வெற்றியடையும் என்பது உறுதி.

1947ம் ஆண்டுக்கு முன் அந்நியர் ஆட்சியில் எப்படி வாழ்ந்தோமோ அப்படியே தான் இன்றும் தமிழராகிய நாம் வாழ்ந்து வருகிறோம். சிங்களவர்களும் தமிழர்களும் இந்த நாட்டின் தனித்தனியான இரு வேறு தேசிய இனங்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. எமது சுதந்திரத்திற்காகப் போராட எமக்கு உரிமை உண்டு. அதைத் தடுத்து நிறுத்தவோ எம்முடைய ஒற்றுமையைச் சீர்குலைத்து எம்மை அலைக்கழிக்கவோ எவருக்கும் உரிமை கிடையாது. எனவே விடுதலைப் பயணத்தைத் தொடர்ந்துள்ள நாம் எமது இயக்கத்தின் முடிவுகளுக்கு கட்டுப்பட்டு நேர்மையாக நெஞ்சுரத்துடன் இயங்குவதற்கு அனைவருமே முன்வருதல் அவசியம்.

### படைகளை அனுப்பினான்

நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது: சிங்கள ராச்சியங்களின் இறுதியானதும் நடுநாயகமானதுமான கண்டி இராச்சியத்தைக் காப்பதற்காக இலங்கையின் பொது அந்நிய எதிராயான ஆங்கிலேயனை எதிர்ப்பதற்காக மாவீரன் பண்டாரவன்னியன் கண்டிக்குத் தனது படைகளை அனுப்பி உதவி புரிந்தான். இந்த ஒரே காரணத்திற்காகத் தான் ஆங்கிலேயர் பண்டாரவன்னியன் மீது வெஞ்சினம் கொண்டு அவனுக்கு இடர் விளைவித்து அவனை வீழ்த்தினார்கள். வரலாறு இப்படி இருக்க இலங்கையில் பௌத்த மதம் மட்டுமே பல சமூகங்களாலும் தழுவப்பட்டது என்றும் இது அன்று தொடக்கம் இன்றுவரை பௌத்த நாடாகவே இயங்கி வருகிறது என்றும் இன்றைய ஆட்சியாளர்கள் கதைகளைத் திரித்துக் கூறி சரித்திரத்திற்கு மாசு கற்பித்து வருகிறார்கள். இது வேதனைக்குரிய தொன்றாகும்.

திரு. எம். சிவசிதம்பரம் தொடர்ந்தும் பேசுகையில் குறிப்பிட்டதாவது: சரித்திரத்தை திரித்துப் புதிய கதைகளைப் பரப்புவதற்கு இன்றைய அரசு புதை பொருளாராய்ச்சிப் பகுதியை தமது கைவாகனமாக இந்த கைங்கரியத்தில் பயன்படுத்தி வருவது வெட்கக் கேடான ஒரு விடயமாகும். அந்நியர் 1803ம் ஆண்டு இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றிய பொழுது பூரணமான இறைமை எமக்கு இருந்தது. 1947ம் ஆண்டு அவர்கள் ஆட்சியை விட்டுச் சென்றபொழுது எம்மிடமிருந்து பறிக்கப்பட்ட இறைமையும் சுதந்திரமும் மீளவும் எமது கைகளில் ஒப்படைக்கப்படவில்லை. இவ்வுண்மையை இன்றைய ஆட்சியாளர்கள் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

அங்குலம் அங்குலமாக திருகோணமலை, வன்னி பகுதிகளின் தமிழ் பாரம்பரிய நிலம் பறித்தெடுக்கப்படுகிறது. அதிகாரத்தைப் பயன்படுத்தி நடாத்தப்படும் இந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதும், அதனை மீட்டு எடுப்பதும், பாதுகாப்பதுமே எமது தலையாய கடமையாகும். இந்த அடிப்படையிலேயே நாம் மாவட்ட அபிவிருத்திச் சபை சட்டமூலத்தை ஆதரித்தோம். மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் மூலம் எமக்குக் கிடைக்கும் அதிகாரங்களை கொண்டு எமது பாரம்பரிய நிலத்தை எம்மால் பாதுகாக்க முடியும்.

இன்று இங்கு சுதந்திர வீர புருஷனின் நினைவு விழாவில் அங்கு கொள்ள வந்த எம்மை எதிர்த்து சுவர்களில் சுலோகங்களை எழுதினார்கள். அவர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். எழுதுவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் சரியானதை எழுதுங்கள், சரியாக எழுதுங்கள் தவறுகள் இருந்தால் தட்டிக் கேளுங்கள். அதே நேரத்தில் காக்கை வன்னியர்களின் பிழையான வழி நடத்தலில் மயங்கி வழி தவறிச் செல்ல முற்படாதீர்கள். பிழையான வழி நடத்தலுக்கு இடமளியாதீர்கள்".

வவனியா எம். பி திரு. தா. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது "அக்கினி குலத்தைச் சேர்ந்தவர்களான வன்னியரின் இணையற்ற வீரனான பண்டாரவன்னியன் விடுதலைக்காக சுதந்திரத்தினைப் பாதுகாப்பதற்காகப் போராடி உயிர் துறந்தான். ஏனைய சமூகத்தவரின் விடுதலைக்காகப் போராடியவர்களின் பெயர்கள் தேசிய வீரர் வரிசையில் இடம்பெற்றிருந்தும் இம்மாவீரனது பெயர் இடம்பெறுதது கண்டனத்திற்குரியது. அரசு உதாசீனம் செய்த பொழுதிலும் பண்டார வன்னியனுக்காக நினைவு தின விழா எடுத்தவர்களின் பணி போற்றுதலுக்குரியது".

கட்சிரீதியில் அபிப்பிராய பேதங்கள் எம்மிடையே இருக்கலாம். ஆனால் தமிழ்மக்களின் உரிமைக்காக சுதந்திரத்துக்காகப் போராடுவது தமிழர்களாகிய எமது தலையாய கடமையாகும். விடுதலைக்காக ஒன்றிணைந்து இயக்க ரீதியில் செயற்படும் எம்மிடையே பிரிவினைகள் பேதங்களுக்கு ஒருபோதும் இடமளித்தல் கூடாது. தலைவர்கள் பிழை செய்தால் தலைமைகளை கூட தென்றால் சந்தர்ப்பங்களைப் பாவித்து புதிய தலைமைகளை உருவாக்குவதற்காக உங்கள் சக்திகளைப் பயன்படுத்துங்கள்.

(க)

## நெடுங்கேணியில் நாவலர்சிலை

(வவனியா- புளியங்குளம்)

நெடுங்கேணி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மாவீரன் பண்டார வன்னியனின் நினைவு தின விழா வெகு கோலாகலமாக நெடுங்கேணியில் கொண்டாடப்பட்டது.

திருகோணமலை, வவனியா, மன்னார், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, நல்லூர் ஆகிய தொகுதிகளின் எம்.பிக்களையும் மற்றும் பிரமுகர்களையும், பொதுமக்கள் பெருந்திரளாகக் கூடி நெடுங்கேணி சந்தியில் இருந்து ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள்.

நெடுங்கேணி கந்தசுவாமி கோவிலைச் சென்றடைந்த ஊர்வலம், அங்குநடைபெற்ற விசேட பூசையில் கலந்து கொண்டு கிராம அபிவிருத்திச் சங்க முன்றலைச் சென்றடைந்தது. அங்கு அமைக்கப்பட்டிருந்த ஆறுமுகநாவலரின் சிலையை வவனியா தொகுதி எம்.பி. திரு. தா. சிவசிதம்பரம் திரைநீக்கம் செய்து வைத்தார் நல்லூர் எம்.பியும், தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவருமான திரு. மு. சிவசிதம்பரம் சிலைக்கு மலர்மாலை அணிவித்தார்.

அதனைத்தொடர்ந்து விழாக்கோலம் பூண்டிருந்த நெடுங்கேணி கடைவீதி வழியாக தலைவர்கள் ஊர்வலமாக மகாவித்தியாலய திறந்தவெளி அரங்கை நோக்கி அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

மகாவித்தியாலய முன்றலில் நெடுங்கேணி முன்னாள் கிராம சபைத்தலைவர் திரு. சி. உ. வல்லிபுரம் பண்டார வன்னியனின் கொடியை ஏற்றிவைத்தார். மாவீரன் பண்டார வன்னியனின் உருவப்படத்திற்கு திரு. மு. சிவசிதம்பரம் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் திரு. சி. பாலசுந்தரம் மங்களவிளக்கேற்றி வைத்ததும் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. வி. குகராசா தலைமையில் விழா ஆரம்பமானது.

திரு. அ. அமிர்தலிங்கம், திருவாளர்கள் மு. சிவசிதம்பரம், இரா. சம்பந்தன், தா. சிவசிதம்பரம், எஸ். சூசைதாசன், வி. யோகேஸ்வரன், கே துரைரத்தினம் ஆகியோரும் திருமதி அ. மங்கையர்க்கரசியும் சிறப்புப் பேச்சாளர்களாகக் கலந்து கொண்டனர். திருவாளர்கள் வே. சுப்பிரமணியர், பொ. சந்திரசேகரி, எஸ். மெற்ருஸ்மைல், . சி. தெய்வேந்திரம்பிள்ளை, வி. சி. செலவராசா உட்படப் பலரும் உரையாற்றினார்கள்.

பொதுக்கூட்டத்தில் இறுதியில் கவியரங்கு, கலைநிகழ்ச்சிகள் பண்டாரவன்னியன் நாடகம் முதலியனவும் இடம்பெற்றன. (க)

### "இவ்வெற்றிடத்தை நிரப்புக"

(பண்டத்தரிப்பு)

சங்கானை ஐக்கிய நலன்புரிச் சங்கம் சங்கானை அரசினர் வைத்தியசாலையில் வைத்திய பொறுப்பதிகாரியின் வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட சுகாதாரசேவை அதியட்சகரை மகஜர் மூலம் வேண்டியுள்ளது இதன் பிரதி வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(அ)


# நெல் விளைச்சல் பெருக நிலையான துணை

# ஸ்டாம் F 34

குதிரைவாற்புல், கடுக்கன்புல், சந்தனக் கோரை முதலாம் நெற்களைகளை அறவே ஒழித்துக்கட்ட வல்லது ஸ்டாம் F-34.

3, 4 டீபீஏ கொண்ட ஸ்டாம் F-34 நெல் வயலில் நெல்லுடன் வளரும் சகல புற்கள், கோரைகளையும் அழிக்கும். குறிப்பாக, குதிரை வாற்புல், கடுக்கன் புல், சந்தனக் கோரை, மும்மூட்டுக் கோரை, நெற்சப்பி போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதில் மிகச் சிறந்தது.




## ஸ்டாம் F 34

உங்கள் நெல் வயலில் ஸ்டாம் F-34 பாவித்தால் விளைச்சல் பெருகி அதிக லாபம் கிடைப்பது உறுதி.

CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
ஹேமாஸ் கட்டிடம், பிரிஸ்டல் வீதி, கொழும்பு 1.

| நிகர அளவு | சில்லறை விலை |
|---|---|
| 3.25 லீட்டர் கொள்லம் | ரூ. 260 60 |
| 450 மி. லீ. போத்தல் | ரூ. 38 75 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹரன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சரோஜாதேவி
**ஆடிப்பெருக்கு**

**வெலிங்டன்** ... (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
**ஷண்முகப்பிரியா**

75-வது நாளை நோக்கி வீறுநடை போடுகிறது
**ராணி** - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
**சட்டம் என் கையில்**
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

**வெலிங்டன்**
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா
**தாய்**

**லிடோ**
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
**கிரகப்பிரவேசம்**

**சாந்தி**
யாழ்நகர் - தினசரி 4 காட்சிகள்
தித்திக்கும் தீபாவளித் திரைவிருந்தாக காட்சியளிக்கும்.
**நீயா?**
கடைசித் தினம் 6-11-80.
7-11-80— "THE DIRTY DOZEN" color

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - ஜெய்சித்திரா
**பணக்காரப் பெண்**
எதிர்பாருங்கள்
**ஒரேவானம் ஒரேபூமி**

வசூலில் பெரும் சாதனே! 6-வது [illegible]
இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவி[illegible] நன்றி
**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன்
மற்றும் பலர் நடித்த
**வண்டிக்காரன் மகன்**
(ஈஸ்மன் கலர்)

வெற்றி முழக்கமிடும் 5-வது வாரம்
**ஸ்ரீதர்** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின் இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர் லதா
பி எஸ் வீரப்பா-நம்பியார் நடித்த
**மீனவ நண்பன்**

**WINDSOR**
(JAFFNA) DAILY 5 SHOWS
Daily at 10-30 A.M., 2-00, 4-30, 7-00&9-30P.M.only

தான் செய்யாத குற்றத்திற்காக மெக்சிக்கோ சிறையில் 28 வருடங்கள் வாழ்கிருன் ஒரு கணவன். கணவனைச் சிறைக்கு அனுப்பியது பேரனின் சூழ்ச்சி என்பதை மனைவி உணர்கிருள், அன்பும், பண்பும் பதிபக்தியும் நிரம்பிய மனைவி தியாகங்கள் பல புரிகிருள். இருந்தும் வீரதீரசூரன் புரூண்சன் ஒருவனல் மாத்திரம் அவனை மீட்க முடிகிறது.

CHARLES BRONSON ROBERT DUVALL, JILL IRELAND
in
**"BREAK OUT"**
Jailed for a crime he never committed - Only Charles Bronson can get him out!
Adults. Color Action.

**நாகம்ஸ்** (சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
[illegible]
**வீரக்கனல்**


# "மாவட்ட அபிவிருத்திக்கு நிதிதருவன தெங்கும் பனையுமே"

## - இராஜலிங்கம் எம். பி.

(நெல்லியடி)

"நாட்டின் அரசியல் பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப எமது நாட்டை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் அபிவிருத்திச்சபைகள்மூலம் நடவடிக்கை எடுத்துள்ளது. அபிவிருத்திச் சபைகள்மூலம் நமது தமிழ்ப் பிரதேசங்களும் விருத்தியுறும். அபிவிருத்திக்குப் போதிய நிதிவளத்தினை, தெங்கு — பனம் பொருட்கள் மூலமாகக்கிடைக்கும் வருமானமே வழங்கவுள்ளது. இவ்வாறு நிதிவளத்தினை வழங்கவேண்டிய தெங்கு — பனம்பொருள் உற்பத்திச் சங்கங்கள் சீராக இயங்க வேண்டியது அத்தியாவசியமானதாகும்."

இவ்வாறு உடுப்பிட்டிப் பாராளுமன்றஉறுப்பினர் திரு. த. இராசலிங்கம். கட்டைவேலி—உடுப்பிட்டி தெங்கு — பனம்பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் பேசுகையில் கூறினர். நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் திரு. செ. [illegible]ங்கராசா தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. இராசலிங்கம் மேலும் பேசியதாவது)

"எமது நாட்டில் மீன்பிடித் தொழிலுக்கு அரசாங்கம் பல வகைகளிலும் உதவி வருகின்றது. கடன் மூலமும், வள்ளங்கள் வலைகள் வழங்குவதன் மூலமும் இவ்வுதவி வழங்கப்படுகிறது. ஆனல் ஐம்பத்தாறு லட்சம் ரூபாவை வரியாகச்செலுத்தும் தெங்கு — பனம்பொருள் உற்பத்திக்கு எதுவித உதவியும் கிடைப்பதில்லை, மீன்பிடித் தொழில் பற்றி எடுத்துரைத்த எத்தனையோ எம். பிக்கள் இருக்கின்ருர்கள். தெங்கு — பனம்பொருள் உற்பத்தியாளர்களும் ஒற்றுமையாகச் செயற்பட்டால் தட்டிக் கேட்டு அரசாங்கத்திடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### தொழிலாளர்களே நடத்துகிருர்கள்.

தெங்கு பனம்பொருள் உற்பத்திச் சங்கங்களைத் தொழிலாளர்களே நடாத்துகிருர்கள். தமக்காகவே நடாத்தப்படுகின்றது என்ற பேருண்மைகளைத் தொழிலாளர்கள் நன்குணரவேண்டும். இச்சங்கங்களின் தொடர்ச்சியான நிர்வாகத்திறமையின்மை, செயற்பாடின்மை என்பவற்ருல் வடமராட்சிப்பகுதியில் சீவல் தொழில் புரிதல் குற்றம் என அரசாங்கம் பிரகடனம் செய்யலாம். ஆகவே இந்த அபாயத்தினை எதிர்நோக்கி, சீவல் தொழிலாளர்களினதும் பிள்ளைகளினதும் எதிர்காலம் நன்ருக இருக்கவேண்டுமானல் சீவல் தொழிலாளர்கள் ஒற்றுமையாகக் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்து செயலாற்ற வேண்டும்".

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு மு. தம்பிமுத்து, தெ. ப. பொ. சங்கச் சமாசச் செயலாளர் திரு க. நடராசா ஆகியோரும் உரையாற்றினர்கள். (அ)

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 19ம் திகதி
செய்வாய்க்கிழமை
(4-11-80)

மேடம்: நண்பர்களுடன் கருத்துவேற்றுமை உருவாகும். வியாபாரிகள் பகைத்துக் கொள்ளநேரிடும். பொருள் செலவிற்கும் இடமுண்டு. எண்ணியதில் தடைகள் தோன்றலாம்.

இடபம். கட்டி வெல்லம் போல் வாழ்க்கை இன்று இனிக்கும். காதலர்கள் எண்ணம் கைகூடும் இனபந்துக்களின் ஆதரவும் பெருகும். வரவிலும் திருப்தி ஏற்படும்.

மிதுனம்: வியாபாரத்துறை விருத்தி உண்டு. செய்தொழிலில் சிறப்புக் கிடைக்கும். வாழ்க்கையில் சுமுகமானநிலை தென்படும் போக்குவரவு சுகமும் உண்டு.

கடகம்: பொருள்வரவு திருதிகமாகஇருக்கும். புத்திரர்களால் புகழும் வந்துசேரும். வணிகர்களுக்கு வியாபாரத் துறையில் வெற்றியும்கிடைக்கலாம்.

சிங்கம்: கடூரப்பார்வை உங்களை வட்டமிடும். எதிர்பாராத வகையில் பொருட்செலவும் உண்டு. தொழில் துறையில் சிறிது மனக்கசப்பும் தென்படலாம்.

கன்னி: ஆசைவார்த்தைகளை நம்பி மோசம் போக வேண்டாம். அகப்பட்டதைச் சுருட்டிக்கொள்ள சிலர் முனைவர். இனம் தெரியாத வேதனையால் தாக்கப்படுவீர்கள். நிதானம் வேண்டும்.

துலாம்: சொற்சிலம்பு ஆடுவதில் இன்று பின்னணியில் நிற்பீர்கள். சொகுசான வாழ்வும் கிட்டும். கல்வி கற்கும் மாணவர்களுக்கு இன்று பொன்னன நாள். இன்று வரவேற்கத்தக்க தினம்.

விருச்சிகம்; சுறுசுறுப்புக்குன்றும். உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள், கொள்கையில் கோணலுடன் கோபமும் அதிகாரிக்கும். அமைதி நன்று.

தனுசு:- அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும், வாகன சுகத்துடன் வாழ்க்கையில் நலனும் உண்டு. தாய்வழியால் நற்செய்தியும் வந்து சேரும்.

மகரம்:- மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். உள்ளத்தில் உவகை துள்ளும் பொன் பொருள் சிறப்புக்கும் இடமுண்டு.

கும்பம்,- வாழ்க்கையில் பகிரானநிலை தென்படும். சிநேகவழியால் கவலைகள் தோன்றலாம். எதிரிகளின் மூலம் உங்கள் அமைதி குன்றலாம். நிதானம் நன்று.

மீனம்;- களஸ்திர வழியால் பொருள் வரவிற்கும் இடமுண்டு. புதிய நண்பர்கள் சேருவார்கள் காதலர்களுக்கு இன்று கனகுசியான சம்பவங்கள் இடம் பெறும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## நவாலி முதலிடம்

(பண்டத்தரிப்பு)

வடபிராந்தியத்திலுள்ள வை. எம். சி. ஏ. இயக்கங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நவாலி வை எம். சி. ஏ. முதலிடம் பெற்றுவெற்றிக் கேடயத்தை சுவீகரித்துள்ளது இச் சுற்றுப் போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. (அ)

## ஈரானின் ..

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பணயக்கைதிகள் எப்போது விடுதலை செய்யப்படுவார்கள் என இப்போது கூறமுடியாதிருக்கிறது என்றும் கூறிய திரு. கார்ட்டர், பணயக்கைதிகள் பகுதிபகுதியாக விடுதலை செய்யப்படுவதை அமெரிக்கா ஒருபோதும் விரும்பாது என்றும் 52 பணயக் கைதிகளும் ஒரேமுறையில் விடுதலை செய்யப்படவேண்டுமென்றும் திரு. கார்ட்டர் கூறினர். (இ)

## ஐ. தே. கட்சி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாதம் 20-ம் தேதிக்கு முன்னர் பொதுநிர்வாக செயலாளர், ஸ்ரீகொத்த கொள்ளுப்பிட்டி என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். ( )

## வெற்றிதோல்வி இல்லை

(சுழிபுரம்)

சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சென்ற சனி கிழமை நடைபெற்றபோட்டியில்பங்கு கொண்ட சுன்னுகம் ஸ்கந்தவரோதயர்க்கல்லூரியும் உரும்பராய் இந்துக்கல்லூரியும் வெற்றிதோல்வியில்லாது ஆட்டத்தைமுடித்துக்கொண்டன. போட்டி முடிவின்போதுரசிகர்களுக்கிடையே ஏற்பட்ட சிறு சச்சரவுபொலிஸ் தலையீட்டால் தடுக்கப்பட்டது. (அ)

## சென்.மேரிஸ் ச. ச. நிலைய புதியநிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை சென்.மேரிஸ் சனசமூகநிலையப் பொதுக்கூட்டம் வண பிதா ஆர். எம். ஜி. நேசநாயகம் அடிகளார் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் ப. அமிர்தராஜா, துணைத்தலைவர் அ. மகேந்திரன், செயலாளர் ஆ. அந்தோனிப்பிள்ளை, துணைச்செயலாளர் சூ. சூசைதாசன், தனதிகாரி செ. அமலதாஸ். கல்வி, சுகாதாரம், விளையாட்டு, சமயம், கலை ஆகிய துறைகளுக்கும் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேற்படி நிலையத் தலைவர் புலவர் கி. சூசைப்பிள்ளை மறைவையொட்டி இரு நிமிடம் மௌனஞ்சலி செலுத்தப்பட்டது. (செ)

## ஏகமனதாகத் தெரிவு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவச் சங்கத்தின் புதிய தலைவராக மாதகல் சென். ஜோசவ்கல்லூரிஆசிரியர் திரு. செ. இராசநாயகம் ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டுள்ளார். உபதலைவராகமாதகலைச் சேர்ந்த ஆசிரியர் திரு. வே. சேனதிராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார். (அ)

## சுழிபுரம் இ. ச. வாசிகசாலை

(சுழிபுரம்)

சுழிபுரம் இராமசபை நடாத்திவரும்வாசிகசாலை இப்போதெல்லாம் தினமும் இரவு எட்டு மணி வரை திறந்துள்ளது. வாசகர்களுக்குச் சகல வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. இராமசபை ஊழியர்கள் இப்பணியில் மிகவும் சிறப்புடன் கடமையாற்றி வருகின்றனர்.

இவ்வாசிகசாலை பற்றிய குறைபாடுகள் 'ஈழநாடு' ஏட்டில் முன்னர் செய்தி வெளிவந்தது தெரிந்ததே. (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

டிஸ்கா ரேடியோ அன் ரீ.வி டெக்னிஷியன்ஸ் பஸ்நிலையம் எதிர்மேல்மாடி



உங்கள் ரேடியோக்கள், டேப்றெக்கோடர்கள், மின்சார உபகரணங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள் எதுவாகுலும் உடன் சீரமைத்துக் கொள்ள.

202, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

## திருமலையில் பாரதி விழா

(திருகோணமலை)

திருகோணமலை இந்துக் கல்லூரியில் பாரதிவிழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பாரதியின் தமிழ்த் தொண்டையும் சமத்துவ நோக்கைப் பற்றியும் பலர் கருத்துரையாற்றினர். கவியரங்கு நிகழ்ச்சியில் திருகோணமலையின் முன்னணிக் கவிஞர்கள் கவிமழை பொழிந்தனர். இவ்விழா திருகோணமலையின் இலக்கியத்துறையில் தனியிடம் வகித்துவரும் முன்னோடிகளால் நடாத்தப்பட்டது. (அ)

கேதார கௌரி விரத வரலாறும் அதன் உள்ளுறையும்
திருக்கேதாரத் தேவாரப் பதிகங்களுடன்
ஆசிரியர்
பண்டிதர் மு. கந்தையா B. A.
விலை 3
காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# பணயக் கைதிகள் விடுதலை

# ஈரானுக்கு முழு ஆதரவில் உதவ

# ஐ. நா. செயலாளர் விருப்பம்

நியூயோர்க், நவ. 3

**அமெரிக்க பணயக் கைதிகளை விடுதலைசெய்வதற்கு ஈரானுக்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்ய ஐக்கிய நாடுகள் சபை முன்வந்துள்ளது.**

**பணயக் கைதிகள் விடுதலைக்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்ய ஐ. நா. தயாராக இருக்கிறது என ஐ.நா. பொதுச்செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெய்ம் ஈரானிடம் தெரிவித்துள்ளார்.**

பணயக்கைதிகள் விடுதலை குறித்து அமெரிக்காவும் ஈரானும் ஒப்பந்தம் செய்துகொள்ளும் பட்சத்தில் அதனை முன்னின்று மேற்கொள்ளவும் ஐ. நா. தயாராக இருக்கிறது.

ஈரானின் நிபந்தனைகளை அமெரிக்கா ஏற்கும் பட்சத்தில் பணயக்கைதிகள் விடுதலையாகும் போது அவர்களைப் பொறுப்பேற்று பாதுகாப்பாக அமெரிக்காவுக்கு அனுப்பி வைப்பதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் ஐ. நா. மேற்கொள்ளும் என்றும் டாக்டர் வால்ட்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இதே வேளையில் பணயக் கைதிகள் விடுதலை குறித்து அவர்களுக்குப் பொறுப்பாக இருக்கும் மாணவர்களும் ஈரானிய புரட்சித் தலைவர் அயத்தொல்லா கொமெய்னியும் இன்று பேச்சுவார்த்தை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

## சில்லறை குற்றவாளிகளுக்கு சரீரப் பிணை!

(கொழும்பு)

சில்லறைக் குற்றவாளிகளை இனிமேல் நீதவான் சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கலாம்.

நீதி அமைச்சில் நடைபெற்ற உயர்தர பொலிஸ் அதிகாரிகளும் சிறைச்சாலை அதிகாரிகளும் அமைச்சு அதிகாரிகளும் கலந்துகொண்ட மகாநாட்டிலேயே மேற்கண்டவாறு முடிவு செய்யப்பட்டது.

திருட்டு, வழிப்பறிபோன்ற சிறு குற்றவாளிகள் இதுவரை சரீரப்பிணையிலேயே விடுதலை செய்யப்பட்டுவந்தனர். (இ)

## மரண அறிவித்தல்

### டொனல் கணேஷகுமார்

முன்னாள் பொலீஸ் சப்-இன்ஸ்பெக்டரும், தற்போது ''வரகன்ஸ்'' சில்' நிர்வாக அதிகாரியாகப் பணிபுரிந்தவருமான டொனல் கணேஷகுமார் காலமானர். இவர் சாந்தினியின் (சட்டத்தரணி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற ராஜகோபால் காந்தரத்தினம், லீலாவதியின் அருமைப் புதல்வனும், காலஞ்சென்ற வழக்கறிஞர் ஜோன்பற்றிக்கின் மருமகனுமாவார். அன்னரின் பூதவுடல் யாழ்ப்பாணத்திலுள்ள, 7?, 4-ம் குறுக்குத்தெரு இல்லத்திலிருந்து இன்று செவ்வாய்க்கிழமை (4-11-80) மாலை 4 மணிக்கு நல்லடக்கத்திற்காக சென் மேரி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
திருமதி சாந்தினி கணேஷகுமார்

7264

## அமெரிக்க...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நாயக்கட்சியின் உதவி ஜனாதிபதி வேட்பாளரான வால்டர் மொன்டேலி 1928 தை 5-ம் நாள் மின்னஸ்டோ மாநிலத்திலுள்ள சிலோன் என்னும் இடத்தில் பிறந்தவர். இவரது தந்தை ஒரு மெதடிஸ்த சபை அலுவலர். சட்டத்துறை பட்டதாரியான இவர், மின்னஸ்டோ மாநில அட்டோர்னி ஜெனரலாகவும் திகழ்ந்தவர். இவருக்கு கொரிய யுத்தத்தில் பங்குபற்றியதன் மூலம் இராணுவ அனுபவமும் உண்டு. ஜிம்மி கார்ட்டரின் தனிப்பட்ட நம்பிக்கைக்கும் அன்புக்குமுரியவராக இவர் விளங்குகின்ருர்.

குடியரசுக்கட்சியின் உபஜனாதிபதி வேட்பாளரான ஜோர்ஜ் புஸ், மசாச்சுசெட்ஸ் மாநிலத்து மில்டன் எனும் இடத்தில் 1924-ம் ஆண்டு ஆனி 12-ம் திகதி பிறந்தவர். இளம் வயதிலே தலைசிறந்த விமான ஓட்டியாகத் திகழ்ந்த இவர் ஒருமுறை பசுபிக்கடல் மேல் பறக்கையில் சுடப்பட்டார். ஆயினும் அமெரிக்க நீர்மூழ்கி ஒன்றின் உதவியால் தப்பிவிட்டார். பொருளியல் பட்டதாரியாக மாறியபின் வியாபாரத்திலும் பொது சேவையிலும் ஈடுபட்டார். 1964-ல் செனட்சபைத் தெரிவில் தோல்வி கண்டாலும் 1966-ல் பிரதிநிதிகள் சபை உறுப்பினராக வெற்றிபெற்ருர், 1972-ல் ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவராகவும், 1973-ல் குடியரசு தேசியக் கமிட்டியின் தலைவராகவும் 1974-ல் சீனவிலுள்ள அமெரிக்க உயர் அதிகாரியாகவும், 1976-ல் அமெரிக்க உளவறியும் ஸ்தாபனமான சி. ஐ. ஏ.யிலும் தலைமை வகித்தவர்.

# ஓய்வூதிய திட்டம்

## கூட்டுறவுத் திணைக்களம் அங்கீகாரம்

(நெல்லியடி)

யாழ்.மாவட்ட தெங்கு-பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச் சமாஜம், கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களான சீவல் தொழிலாளர் மத்தியில் விபத்து ஓய்வூதிய நலத்திட்டமொன்றை அமுல் செய்யவுள்ளது. இத்தகைய நலத்திட்டத்தினை கூட்டுறவுத் திணைக்களமும் அங்கீகரித்துள்ளது.

சங்கத்திஞல் ஒதுக்கப்பட்ட மரமொன்றில் தொழில்புரியும் பொழுது விபத்திற்குட்படும் சீவல் தொழிலாளிக்கு நஷ்டஈடு வழங்குவதனையும், வயது மூப்புக் காரணமாக அல்லது சுகவீனம் காரணமாகத் தொழிலிலிருந்து ஓய்வு பெறுவோருக்கும் ஓய்வூதிய நலன் புரிவதற்காக இத்திட்டம் செற்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் விபத்திஞல் மாணம் ஏற்பட்டால் 10 ஆயிரம் ரூபாவையும், விபத்திஞல் நிரந்தர பாதிப்பு ஏற்பட்டால் 3 ஆயிரம் தொடங்கி 6 ஆயிரம் ரூபாவிற்கு இடைப்பட்ட தொகையினையும், விபத்திஞல் நீண்டகால பாதிப்பு உண்டாஞல் 2 ஆயிரம் தொடங்கி 5 ஆயிரம் ரூபா வரைக்குள்ளும், விபத்தால் மத்தியகாலபாதிப்பு (3-12 மாதம்) ஏற்பட்டால் ஆயிரம் ரூபாவிற்கும் 2 ஆயிரத்திற்கும் இடைப்பட்ட தொகையினையும், குறுகியகால பாதிப்பு ஏற்பட்டால் ஆயிரத்திற்கு மேற்படாத தொகையினையும் சீவல் தொழிலாளர் ஒருவர் பெற்றுக்கொள்ள முடியும்.

இத்திட்டத்தின்கீழ் 5 வருடத்திற்குக் குறையாமல் பங்களிப்பு செய்தவர்கள் சுகவீனம் அல்லது வயது மூப்புக் காரணமாக தொழிலிலிருந்து ஓய்வு பெறுவோரும் ஓய்வூதியத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

இவ் ஓய்வூதியத் தொகை ஆயிரத்திற்குக் குறையாமலும் திட்டத்திற்கு சீவல் தொழிலாளி செலுத்திய பங்களிப்பு தொகையின் 10 மடங்கிற்கு மேற்படாமலும் பெற்றுக் கொள்ளத்தக்கதாக அமைந்துள்ளது. ஓய்வூதியம் பெற விண்ணப்பிப்போர், தமது கோரிக்கையுடன், பதிவுபெற்ற வைத்திய அதிகாரியின் வைத்திய அறிக்கையினையும் சமர்ப்பிக்கவேண்டும்.

சமாசத்தின் இயக்குநர் சபை தீர்மானித்த தொகையே சீவல் தொழிலாளருக்கு வழங்கப்படும். தடடத்தில் சீவல் தொழிலாளர் செலுத்திய பங்களிப்பு, விபத்துநேரம், தொழிலாளியின் தரம் குடும்பநிலை என்பவற்றையும் ஆரம்ப சங்கத்தின் சிபார்சினையும் ஆராய்ந்தே சமாஜம் இத்திட்டத்தின் கீழான கொடுப்பனவுத் தொகையினை வழங்கும்.

## பிரார்த்தனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் அகால மரணமடைந்த ஸ்ரீ வத்ஸராஜசர்மாவின் ஆத்மசாந்தி பிரார்த்தனைக் கூட்டம் நாளை முற்பகல் சுன்னுகம் கதிரமலைச்சிவன் ஆலய முன்றிலில் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, திருமதி. வசந்தா வைத்தியநாதன், மாவை து. சண்முகநாதக்குருக்கள் ஆகியோர் உரையாற்றுவர்.

## எருக்கலம்பிட்டியில் ப. பொ. அ. ச கிளை

(மன்னுர்)

பிரதேச அபிவிருத்தியமைச்சின் எருக்கலம்பிட்டியில் பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் கிளை நிறுவடபடவுள்ளது.

மூதூர் எம். பி.யும், மன்னுர் மாவட்ட அமைச்சருமான ஜனப் எம். ஈ. எச். மஹ்றூப்பின் முயற்சியையடுத்து இக்கிளை நிறுவப்படவுள்ளது. (அ)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் நவம்பர் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka under No. QD 8948/78 The Eelanaadu P. B. No 49
Grams Eelanaadu. Phone, 38

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org